**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.118 /2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : பூபதி |
| Father's Name/ Husband's Name | : காத்தவராயன் |
| Village & Taluk | : மகாதேவி மங்களம் |
| Calling | : விவசாயம் |
| Age | : 65 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சி2 ஏழுமலை எனது மாமா மகன் ஆவார். கடந்த 2020ம் வருடம் ஒரு நாள் மதிய வேலையில் நானும் எனது மாமா மகன் ஏழுமலை என்பவரும் மதுபானம் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வரும்போது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் எனது மாமா மகனை திட்டி தாக்கிவிட்டு ஓடிவிட்டார். எதிரி தாக்கவில்லை. அதில் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயமடைந்த அவரை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். இது சம்பந்தமாக நான் வளத்தி காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான் கடந்த 16.05.2020 தேதி மதியம் 02.30 மணிக்கு நானும், எனது மாமா மகன் ஏழுமலை என்பவரும் இல்லோடு மதுபானகடைக்கு சென்று வீட்டிற்கு வந்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது ஆஜர் எதிரி எனது மாமா மகன் ஏழுமலை

என்பவரை தகாத வார்த்தைகளால் திட்டி தடியால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் யாரோ ஒரு நபர் அவ்வாறு செய்தார் எதிரி இல்லை. நான் மேற்படி சம்பவத்தை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நானும் எதிரியும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவரை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.118 /2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : ஏழுமலை |
| Father's Name/ Husband's Name | : கண்ணன் |
| Village & Taluk | : மகாதேவி மங்களம் |
| Calling | : – |
| Age | : 80 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 பூபதி எனது மாமா ஆவார். கடந்த 2020ம் வருடம் ஒரு நாள் மதிய வேலையில் நானும் எனது மாமா அ.சா.1ம் மதுபானம் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வரும்போது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் என்னை திட்டி தாக்கிவிட்டு ஓடிவிட்டார். எதிரி தாக்கவில்லை. அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயமடைந்த நான் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். இது சம்பந்தமாக எனது மாமா வளத்தி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான் கடந்த 16.05.2020 தேதி மதியம் 02.30 மணிக்கு நானும், எனது மாமா அ.சா.1 பூபதி என்பவரும் இல்லோடு மதுபானகடைக்கு சென்று வீட்டிற்கு வந்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி தடியால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் இல்லை. நான் மேற்படி சம்பவத்தை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நானும்

எதிரியும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவரை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

| |
|---|
| என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.<br>Sd/-B.Vidhya<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>செஞ்சி. |